ரெஜிஸ்டர் நெ. M. 3855.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 5. டிசம்பர், 1942 நெ. 9.

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம்.எல்.ஏ.

எஸ். சத்தியநாராயணு

எடிடர்.

ஸ்ரீமான்

ஜி. கிய்யண்ணு, பி.ஏ., பி.எல்.

---

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

# பொருள் அடக்கம்.


1. தலையங்கம்.—

குடிசைத் தொழிலாக காகிதப் தயாரித்தல் ... 313
பல ஜில்லாக்களில் பஞ்சம் .... ... 315
பஞ்சாயத்து மசோதா ... .... 315
விலையேற்றமும், பஞ்சாயத்துகள் கடமையும் .... 316
நிலவரி சலுகைகள் ... ... 317


2. நிலவரி வஜா—சென்னை கவர்மெண்டின் உத்திரவு ... 318

3. கவர்மெண்டு தொழில் இலாகா யாதாஸ்திலிருந்து சில குறிப்புகள் ... ... 319

4. நம் கனிச் செல்வம் ... ... 222

5. வர்த்தமானங்களும்—குறிப்புகளும் .... .... 323






கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# The Village Panchayat Journal.

VOL. VI  DECEMBER. 1942.  [No. 9.

*The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.*

---

## Paper as a Cottage Industry.

Paper is an essential commodity for any civilised nation. We in India have been consumers of paper in very large quantities. The present war has put a stop to imports of it. All demand has to be met by local production which does not supply, in ordinary times more than a fraction of Indian needs. It has therefore happened that today, even with some increased output, the Government in India takes up 90% of the production. Paper is required for purposes of war in scores of ways including sanitary wrapping of bread. So it is that private business depending on paper has been hard hit. Many periodicals have ceased publication. The remaining have been reduced in size both dimentionally and in bulk. New additions to volume of Journals and advertisement have come under control. Fresh starting of journals has had practically to cease. What sold at As. 1-8 pies per lb. before the war, is not now available at Rs. 0-13-0.

All this is happening in India though we have plenty of raw material available in forms innumerable. Paddy straw, wild mountain grass, bamboo, used ropes, or, other articles of hemp or jute, old gunny or cotton bags and some soft wood. Paper may be made easily by hand. As per a pamphlet issued by the Gandhi Ashram, Tiruchengode on the subject an investment of Rs. 100 is sufficient to equip a village unit with implements such as lifting mats, frames, drums, oven (which can be had from the local potter for 0-1-0,) napkins, planks for lifting, sizing and glazing, a pounder or a Dhenki for reducing cloth or gunny rags into pulp, cutting press and knife etc. Probably a couple of hundred rupees would be needed for expenses. With this equipment, we are told, a ream of foolscap paper a day may be turned out. It easily sells today at Rs. 9. Caustic soda

and bleaching powder appear to be practically the two chemicals required. If properly organised with the full support of the Government, every village which can locally command raw material of the description given and good fresh water can begin a unit and manufacture paper enough for local needs. What becomes of this industry after the war need not trouble us; for, adopted to manufacture of rough and heavier sorts of paper and paste board the cottage made material promises to stand competition. Even if a number of centres have to be closed down, the capital invested would have been amply repaid before competition again raises its head. People who might be otherwise unemployed would have found employment during these hard times of war and would have had sufficient experience to get into the paper concerns. It will be well if Panchayats can take interest in this matter and, wherever feasible, encourage the formation of local co-operative societies which may easily be both producers and consumers of paper. Entitled under the Local Boards Act (Schedule V Optional duties) to work up cottage industries panchayats may even take one share or a small number of shares and apply to the Government for sanction. The Government also may move in the matter and make the situation easy for people desiring to take up this industry as a cottage industry, by making arrangements to ensure supply of the two simple chemicals, by facilitating supply of raw materials from the forests, by aiding societies started through the co-operative and industrial departments, and by organising such technical advice as may be possible. We hope sufficient efforts will be put forward from all quarters to solve a problem of a very pressing nature in own general advancement

---

## Famine conditions in several districts.

The Deccan districts of this province *i.e.*, the area known as the Rayalaseema including Anantapur, Bellary, Cuddapah, Kurnool and Chittore and the Coastal Districts of North and South Arcots and Chingleput with poor soils mainly depend on the North-East monsoon for their crops. This year the North-East monsoon has proved a great disappointment. Between August and November not much rain has fallen in these areas. More especially in the Deccan area even in ordinary years rains cease after October and, whatever may be happening on the Coasts, the interior districts have to wait till the next June again for the blessing of the Rain God. The ryot in these areas who has not enough food and fodder to live even in normal years, and who is subjected to scarcity conditions are from out of five years, must experience excrutiating conditions during times such as the present when prices of all necessities have gone up unprecedentedly. It becomes the special duty of the Government to take especial care of these areas. Remissions have to be granted on a

liberal scale. Foodstuffs have to be transported in time and properly distributed. Famine works should be started and labour paid, not in the old parsimonious manner of the famine code, but commensurate with the needs of the present critical economic conditions. We do hope that the Government of Madras will take prompt measures.

## The Panchayat Bill.

The Panchayat Bill is expected to be promulgated soon. Intensive work has to be started as soon as the Act is Promulgated. District Conferences will have to be arranged to start Joint-Committees and to give life to Panchayats. Conferences are the best media to arouse the Panchayats from the stupor under which they have lain all these years. We appeal to workers and active Panchayats to begin work. We hope Government will give every facility for such conferences. We have a sympathetic Adviser in Mr. T. G. Rutherford.

## High prices and the role of panchayats.

The problem of problems in these days of the most devastating war is the problem of prices. We are producing crops and raising food material. Campaigns of grow more food are in full swing and it is claimed that they have added to the stock of food material. Yet prices of necessities like rice, millets, sugar, chillies and vegetables—let alone kerosene—soar high, so high that we stand staggered. No doubt there have been certain causes at work which all of us in the country know. Burma has ceased to send us rice and that causes a real shortage in that staple. But that itself cannot be a sufficient explanation ; for, except for the habitual eater of rice as staple it should not cause embarassment. There is the other factor of military personnel. This appears also to be not sufficient explanation. Foreign military personnel added to our numbers cannot be very appreciable as compared with our population. The Indian personnel has always been there for food and clothing—only it is possible that, by being employed for military purposes, they are better situated to day. They are probably capable of eating better food and wearing better apparel. There is, however, one aspect of the military situation that is responsible for tightened conditions—the holding in stock of large quantities of foodstuffs and other necessaries by the Government for emergencies. We do feel that the Government is constantly on the watch and holds stocks which are considered absolutely essential. The Government have stated often that there are adequate stocks of food available for the civil population. Now, therefore, eliminating one factor after another, we arrive at one or two real causes which are responsible for the very great unsettlement of conditions in the price levels. The main fault seems to lie in the system of distribution. The profiteering motive in the trader appears to be the one factor that

will have to be countered. The difficulty of transport is equally important. The profiteering motive is creating black-markets. Price control in itself is proving not sufficient protection and probably not advisible as it may affect the Ryot-Producer. These difficulties can be cured fully only by Government action—either rationing of all commodities or taking over sale of all necessities of life through special shops of the co-operative type. But even while Government is not acting in these directions much may be done by developing public opinion. We appeal to all Panchayats and Panchayatdars to keep in constant touch with local conditions and by constant, quiet propaganda guide their populations in putting down black-markets and countering the hoarding-for-safety habits. The question of transport, we are afraid, has assumed wrong proportions on account of centralised conditions of life. While keeping in view the needs of war and the welfare of the general population in the country, the time has arrived when steps should be taken immediately to localise and decentralise supply as well as transport. It is not enough to decentralise supply questions upto the limit of the province, or, the district. The decentralisation should go down to the village or group of villages. The Panchayat organisations—Joint committees of Panchayats created for this specific purpose under the present act—should form the basic bodies to advise about local production, supply, black-markets, hoarding-for-safety habits and the like and in co-operation with co-operative societies arrange for proper distribution of necessities of life, of course under a homogeneous scheme fostered by the Government. We appeal to the Panchayats to arise, awake and furiously think of the present position and offer their fullest co-operation to the Government in allaying the present distressing conditions. We appeal to the Government also, with all the emphasis at our command, that in the midst of a catastrophic situation, they have in their power, if they so will, the making of the future of the Indian village if they but develope the fundamental economic and administrative units suited to this country—the Co-operative society and the Village Panchayat. They are the institutions that can fashion life in this country through good, bad and threatening periods. We understand that the question of buying up a third of the quantity of rice consumed and distributing through wholesale sources is under consideration of Government. It is the duty of Government to step in at once and not allow the matter to be under consideration in the usual manner of delay. The crop is harvested in many districts and middlemen merchants will buy up the paddy from the ryots and then create a black market or inflate prices, thereby gaining for themselves at the expense of the ryot. The Government must be able to buy directly from the ryot and not from any middleman. Where there are no co-operative Sale Societies, we hope the Government will utilise the Panchayats as an agency.

---

## Land Revenue Concessions.

We are glad that the Government have decided to continue Land Revenue concessions for the present year amounting to about Rs. 70 lakhs. The G. O. is published elsewhere.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

| Vol. 5 | டிசம்பர், 1942. | No. 9 |
|---|---|---|

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப் தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற்செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

## தலையங்கம்.

### குடிசைத் தொழிலாக காகிதம் தயாரித்தல்.

எந்த நாகரிகமான தேசத்திற்கும் காகிதம் இன்றியமையாதது. நாம் நம் தேசத்தில் மிகவும் அதிகமாக காகிதம் உபயோகித்து வருகிறோம். இப்போது நடக்கும் யுத்தம் காரணமாக காகித இறக்குமதி நின்றுவிட்டது. சாதாரண காலங்களிலேயே தேவைக்கு மிக்க சிறிய அளவே உற்பத்தி செய்ய முடிந்த நம் தேசத்து காகித உற்பத்திசாலைகளையே தற்சமயம் நம் பூரா காகிதத் தேவைக்கு எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகையால் அதிக உற்பத்தி செய்தும் கூட தற்போதைய உற்பத்தியில் 90 சதவிகிதம் கவர்மெண்டு எடுத்துக்கொள்ளுகிறது. யுத்தத்திற்கு பல விதங்களில், ரொட்டியை சுத்தமான காகிதத்தில் கட்டிக்கொடுப்பது உள்பட, காகிதம் தேவையாயிருக்கிறது. ஆகையால் தனிப்பட்டவர்களுக்கு காகிதம் கிடைக்காமல் மிகவும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அநேக பத்திரிகைகள் பிரசுரிப்பதை நிறுத்திவிட்டன. மற்றவை அளவையும் சமாச்சாரத்தையும் குறைத்துவிட்டன. புது பத்திரிகை ஆரம்பித்தல், விளம்பரம், இவைகள் கட்டுப்பாடு செய்யப்படுகின்றன. புது பத்திரிகைகள் ஆரம்பிப்பதை வேண்டுமென்றே தடுக்கப்படுகிறது. சண்டைக்கு முன் ஒரு பவுண்டு 2 அணாவிற்ற காகிதம் இப்போது 13 அணா கொடுத்தாலும் கிடைப்பது அரிதாகிவிட்டது.

இவையெல்லாம் நம் தேசத்தில் காகிதம் செய்ய தேவையான சாமான்கள் ஏராளமாக கிடைத்தும், ஏற்பட்டிருக்கின்றன. நெல், வைக்கோல், காட்டுமலை புல், மூங்கில், பழைய நார் அல்லது சணல், பழைய கோணிப்பை

அல்லது நூல்பைகள், சில மெதுவான மரம், இவைகள்தான் தேவையான வைகள். கையால் சுலபமாக காகிதம் செய்யலாம். திருச்செங்கோடு காந்தி ஆச்ரமம் விடுத்துள்ள பிரசுரத்திலிருந்து, ஒரு கிராமத்து குடிசைத் தொழிலுக்குத் தேவையான சாமன்கள்—அ—து. தூக்கு பாய்கள், சட்டம் முதலியவை, டப்பாக்கள், அடுப்பு (அ—து உள்ளூர் குயவனிடம் 1 அணு செலவில் கிடைக்கக்கூடியது). சிறிய கைத் துணிகள், பலகைகள், பொடி செய்ய ஒரு இயந்திரம், துணிகளையும், கோணிகளையும், கோணி, கந்தை இவைகளை கூழாக்க ஒரு பாத்திரம், வெட்டும் எந்திரம், கத்தி முதலியன—இவைகள் எல்லாம் 100 ரூபாய் செலவு செய்தால் கிடைக்கும் என்று தெரிகிறது. வேலை செய்யும் செலவுக்கு சுமார் 200 ரூபாய் தேவையாக இருக்கலாம். இந்த சாமான்களை கொண்டு தினந்தோறும் 'பூல்ஸ்காப்' (Foolscap) அளவில் ஒரு ரீம் காகிதம் தயார் செய்யலாம் என்று தெரிகிறது. தற்சமயம் அதன் விலை 9 ரூபாய். சலவை பௌடரும், காஸ்டிக் சோடா (Caustic soda)வும்தான் தேவையான ரசாயனப் பொருள்கள். தகுந்தபடி ஏற்பாடு செய்து, கவர்மெண்டின் பூரண ஆதரவு கிடைக்கும் பக்ஷத்தில் மேலே சொன்ன சாமான்களும், நல்ல சுத்தமான ஜலமும் கிடைக்கக் கூடிய ஒவ்வொரு கிராமமும் தனக்குத் தேவையான காகிதத்தை தயார் செய்யலாம். யுத்தத்திற்கு பின் இதன் கதி என்ன என்பதைப்பற்றி நாம் இப்போது கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் கனமான முறட்டு காகிதம், அட்டை இவை உற்பத்தியில் குடிசைத் தொழில் காகிதம் போட்டியை சமாளிக்க முடியும். அநேக இடங்கள் மூடவேண்டி வந்தாலும், செலவு செய்த முதல் எப்படியாவது திரும்பி கிடைக்கும். வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு, இந்த கஷ்ட காலத்தில் ஒரு வேலை கிடைத்து காகித தயாரிப்பில் நல்ல அநுபவம் பெற்று பின்னிட்டு அது சம்பந்தமான தொழில் சாலைகளில் வேலை கிடைக்க இடமுண்டு. இது விஷயமாய் பஞ்சாயத்துக்கள் சிரத்தை எடுத்துக்கொண்டு, எங்கெங்கு சாத்தியமோ அங்கெல்லாம் காகிதம் உற்பத்திக்கும், விற்பனைக்கும் கோவாபரேடிவ் சங்கங்கள் ஸ்தாபிக்க தூண்டினல் மிகவும் விசேஷமே.

ஸ்தல ஸ்தாபன சட்டம் (ஐந்தாம் ஷெடியூல்—இஷ்டப்பட்ட கடமைகள்) குடிசைத் தொழிலில் வேலை செய்ய இடம் கொடுக்கிறது. பஞ்சாயத்துகள் கவர்மெண்டு அனுமதிக் கெழுதி, ஒரு பங்கோ, கொஞ்சம் பங்கையோ அந்த உற்பத்தி தொழில்களில் எடுத்துக்கொள்ளலாம். கவர்மெண்டும் இது விஷயமாய் கவனம் செலுத்தி, காகிதம் செய்வதை குடிசைத் தொழிலாக செய்ய விரும்புவோருக்கு, ரசாயன பொருள்கள் கொடுப்பது, காடுகளிலிருந்து தேவையான சாமான்கள் கொடுக்க வசதி கொடுப்பது, கோவாபரேடிவ், தொழிற்சாலை இலாககாக்களால் ஆரம்பிக்கப்பட்ட சங்கங்களுக்கு உதவியளிப்பது, வேலை சம்பந்தமான விஷயங்களில் கூடியமட்டும் ஆலோசனைகள் சொல்லுவது, இந்த விதங்களில் சகாயம் செய்யலாம்.

நம் முன்னேற்றத்தை பாதிக்கும் ஒரு மிக முக்கியமான இந்த விஷயத்தைக் குறித்து எல்லாரும் தகுந்த முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம்.

---

## பல ஜில்லாக்களில் பஞ்சம்.

நம் மகாணத்து டெக்கான் ஜில்லாக்கள் அ. து. ராயலசீமா என்று சொல்லப்படும் அநந்தப்பூர், பெல்லாரி, கடப்பை, கர்னூல், சித்தூர் ஜில்லாக்களும், மட்டப் பூமி வளப்பமான வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களும் தங்கள் பயிர்களுக்கு முக்கியமாக வட கிழக்கு பருவ மழையையே நம்பி யிருக்கின்றன. இவ்வருஷம் வடகிழக்கு பருவ மழை தவறிவிட்டது. ஆகஸ்டு மாதம் முதல் இதுவரையில் இந்தப் பிரதேசங்களில் அதிக மழை கிடையாது. முக்கியமாக சாதாரண வருஷங்களிலேயே டெக்கான் பிரதேசங்களில் மழை அக்டோபர் மாதத்திற்கு பின் நின்றுவிடும். சமுத்தர கரையோரமாக இருக்கும் பிரதேசங்களை நீக்கி, இந்த பிரதேசங்களில் அடுத்த ஜூன் மாதம் வரையில் வருண பகவானை தரிசிக்கவே முடியாது. சாதாரண காலங்களிலேயே இந்த பிரதேசத்து விவசாயிகளுக்கு உண்ண உணவும், மாட்டுத் தீனியும் கிடைப்பது கஷ்டம். இப்போது எல்லா பொருள்களின் விலையும் அமோகமாக ஏறியிருக்கும் சமயத்தில், அவன் படும் கஷ்டத்தைச் சொல்லிமுடியாது. ஆகையால் கவர்மெண்டு இந்த பிரதேசங்களைக் குறித்து பிரத்யேக கவனம் செலுத்தவேண்டியது அவர்கள் முக்கிய கடமை. தாராளமாக வரி வஜா செய்யவேண்டும். சரியான காலங்களில், ஆகாரப் பொருள்களைத் தருவித்து, சரியாக வினியோகிக்கவேண்டும். பஞ்ச நிவாரண வேலைகள் ஆரம்பித்து, கூலியாட்களுக்கு, பஞ்ச சட்டத்தில் சொல்லியிருக்கும் பிசினாரித்தனமான ஊதியம் கொடுக்காமல் இப்போதிருக்கும் நெருக்கடியான சந்தர்பத்தை யொட்டி, தாராளமாக கொடுக்கவேண்டும். சென்னை கவர்மெண்டு இது விஷயமாக தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுவார்கள் என நம்புகிறோம்.

---

## பஞ்சாயத்து மசோதா.

பஞ்சாயத்து மசோதா சீக்கிரம் சட்டமாக்கப்படும். அது ஆனவுடன் தீவிரமான வேலைகள் செய்ய ஆரம்பிக்கவேண்டும். கூட்டுக் கமிட்டிகள் ஏற்படுத்தி, பஞ்சாயத்துகளுக்கு உயிர் அளிக்க ஜில்லா மகாநாடுகள் கூட்டவேண்டும்.

இத்தனை வருஷங்களாக நித்திரையிலிருக்கும் பஞ்சாயத்துக்களை எழுப்ப, மகாநாடுகள் தான் சரியான வழி. ஊழியர்களையும், சுறு சுறுப்புள்ள பஞ்சாயத்துக்களையும் வேலையை துவக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். கவர்மெண்டார் அந்த மகாநாடுகளுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பார்கள் என்று நம்புகிறோம். ஆலோசனையாளர், T. G. ருதர்போர்டு அவர்கள் மிகவும் அநுதாபமுள்ளவர்.

## விலையேற்றமும், பஞ்சாயத்துகள் கடமையும்.

இந்த துவம்சம் செய்யும் யுத்த சமயத்தில் எல்லாவற்றையும் விட மிக வும் சிக்கலான் பிரச்னை, விலைவாசிகளைப்பற்றித்தான். நாம் பயிர் செய்து, ஆகாரம் உற்பத்தி செய்கிறோம். அதிக ஆகார உற்பத்தி இயக்கம் மும் மரமாக இருக்கிறது. அதன் பயனாக அதிக ஆகாரம் உற்பத்தியாகி யிருப்ப தாக சொல்லப்படுகிறது. ஆயினும், மிகவும் அவசியமான, அரிசி, தான்யங் கள், சர்க்கரை, மிளகாய், காய்கறிகள், (மண்ணெண்ணை ஒருபுற மிருக் கட்டும்) இந்த பொருள்களின் விலை நாம் பிரமித்துப்போகும்படி ஏறிக் கொண்டிருக்கிறது. அதற்கு சில காரணங்கள் இருப்பது நமக்கெல்லா ருக்கும் தெரியும். பர்மாவிலிருந்து அரிசி வராததால், அதன் விலை அதிகரிக்கிறது. ஆனால் அது முற்றிலும் அதனால் அல்ல. ஏனெனில் அரிசியையே முக்கியமாக உபயோகிப்பவர்களுக்குத் தவிர, அதனால் கஷ் டம் ஏற்படாது. சண்டை துருப்புகள் விஷயமும் கவனிக்க வேண்டும். ஆனால் இது கூட பூராகாரணமாகாது. நம் ஜனத் தொகையுடன் கணக்கு பார்த்தால் வெளி நாடுகளிலிருந்து வந்திருக்கும் துருப்புகளின் எண்ணிக்கை அதிகம் இருக்காது. நம் தேசத்தவர்கள் எப்போதும் தான் உணவு உண்டு துணி கட்டிவந்தார்கள். ஆனால் சண்டைப் பட்டாளத்தில் சேர்ந்ததால் அவர்கள் நிலமை கொஞ்சம் உயர்ந்திருக்கிறது. அவர்களுக்கு நல்ல ஆகார மும் நல்ல துணிமணிகளும் கிடைக்கலாம். ஆனால் யுத்த நிலமை காரண மாக ஒரு காரணம் இந்த கஷ்ட நிலமையை உண்டாக்கி யிருக்கிறது. அ.து. கவர்மெண்டு நெருக்கடிக்காக அதிகமான ஆகாரப் பொருள்களையும், மற்ற அவசியமான பொருள்களையும் சேகரித்து வைத்திருக்கிறது.

கவர்மெண்டு நிலமையை ஊக்கமாக கவனித்து, மிகவும் முக்கியமான அளவுக்கே சேகரித்து வைத்திருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். ஜனங்களுக்குத் தேவையான ஆகாரப் பொருள்கள் தேவையான அளவு இருக்கிறது என்று கவர்மெண்டு அடிக்கடி தெரிவித்திருக்கிறது. ஆகை யால், ஒவ்வொரு காரணத்தையும் அலசிப்பார்த்து, தற்சமயம் இருக்கும் விலைவாசிகளின் அதிகரிப்புக்கு சரியான ஒரிரு காரணங்களைச்சொல்லலாம். முக்கியமான கோளாறு விநியோகம் செய்வதில் ஏற்படுகிறது. வர்த்தகம் செய்பவனின் கொள்ளை லாபம் அடிக்கும் ஆசை ஒரு காரணமாகும். அதைத் தடுக்கவேண்டும். போக்குவரத்து சாதனங்கள் விஷயமாக இருந்து வரும் கஷ்டங்களும் முக்கியமானவை. கொள்ளை லாபம் அடிக்கும் ஆசை யானது, சரக்கை அமுத்தி வைப்பதில் கொண்டுவிடுகிறது. விலை கட்டுப் பாடு சரியான பரிகாரம் இல்லை. மேலும் அது விவசாயியை பாதிப்பதால், விரும்பத்தக்கதுமில்லை. இவைகளை கவர்மெண்டு நடவடிக்கை எடுத்து தான் தடுக்க முடியும். ஒன்று எல்லா சாமான்களையும் அளவு திட்டம் செய்து கொடுப்பது, அல்லது, கோவாபரேடிவ் முறையில் வியாபார ஸ்த லங்கள் ஏற்படுத்தி எல்லா முக்கிய பொருள்களையும் அதனிடம் ஒப்ப டைத்து, அதன் மூலம் விநியோகிப்பது. கவர்மெண்டு சும்மாயிருந்தாலும்

கூட பொது ஜன அபிப்பிராயத்தை இது விஷயமாக இழுத்து அதிக வேலை செய்யலாம். எல்லா பஞ்சாயத்துக்களையும், பஞ்சாயத்தார்களையும் தங்கள் தங்கள் பிரதேசங்களிலுள்ள நிலைமையை கூர்மையாக கவனித்து, ஜனங்களுக்கு சரியான வழிகளை அனுசரிக்கும்படி பிரசாரம் செய்து, சரக்குகளை அழுத்துவது, முன் ஜாக்கிரதைக்காக அதிக சரக்குகளை சேகரித்து வைத்துக்கொள்ளுவது முதலியவைகளை தடுக்க முயற்சி செய்யும் படிக்கும் கேட்டுக்கொள்ளுகிறோம். போக்குவரத்து விஷயம் தாறுமாறாக இருக்கிறது. சண்டையின் தேவைகளையும், பொது ஜனங்களின் நன்மைகளையும் கவனிப்பதோடு கூட, சாமான்கள் விநியோகம், போக்குவரத்து விஷயங்களை, மத்தியதா பொறுப்பிலிருந்து நீக்கி, அந்த அந்த ஸ்தலங்களின் அதிகாரத்திற்குட்பட்டிருக்கும்படியாக செய்ய வேண்டும். அந்த அந்த ஜில்லா, மாகாணத் தேவையளவிற்கு மாத்திரம் அதிகாரத்தை அவ்விடங்களில் ஒப்படைத்தால் போதாது. அது கிராமத்திற்கு, அல்லது ஒரு கிராமவட்டத்தினிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். பஞ்சாயத்துகள்—புது சட்டப்படி பஞ்சாயத்து கூட்டுக்கமிட்டிகள்—இது விஷயமாக அந்த அந்த பிரதேசங்களின் உற்பத்தி, விநியோகம், சரக்கை அழுத்துவது, முன் ஜாக்கிரதைக்காக சேகரிக்கும் வழக்கம், இவைபோன்ற விஷயங்களில் ஆலோசனை சொல்லி, கவர்மெண்டு அனுமதியின் பேரில், கோவாபரேடிவ் சங்கங்களின் ஒத்துழைப்புடன், ஒரு திட்டப்படி, முக்கியமான ஆகாரப் பொருள்களை எல்லாருக்கும் விநியோகம் செய்ய அதிகாரம் பெறவேண்டும். பஞ்சாயத்துக்களை விழித்து எழுந்து, இந்த கஷ்டமான காலத்தில் கவர்மெண்டுக்கு பூரண ஒத்துழைப்பைக் கொடுத்து சேவை செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். கவர்மெண்டுக்கும் இந்த நெருக்கடியான சமயத்திலும், தாங்கள் இஷ்டப்பட்டால், கோவாபரேடிவ் சங்கங்களும், பஞ்சாயத்துகளும் சரியான முறையில் அமைத்து—இந்த தேசத்திற்கு நன்மை செய்ய ஏற்ற ஸ்தானங்கள் அவைகள்தான்—அதை கவர்மெண்டுதான் செய்ய அதிகாரம் உண்டு—தாங்கள் செய்ய வேண்டிய கடமையை செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

தேவையான அரிசியில் மூன்றிலொருபங்கை வாங்கி, மொத்த விற்பனை சங்கங்கள் மூலமாக விநியோகம் செய்யும்படி ஏற்பாடு செய்ய கவர்மெண்டு ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. கவர்மெண்டார் தாமதமின்றியில் இந்த விஷயத்தில் தலையிட்டு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். வழக்கம்போல் காலஹரணமாக்கும் யோசனைகளிலேயே இருக்கக்கூடாது. பலவிடங்களில் அறுவடை நடக்கிறது. நடுவிலிருக்கும் தரகர்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கி, சரக்கை அழுத்தவும், விலையை உயர்த்தவும் பிரயத்தினம் செய்வார்கள். இதனால் விவசாயிக்குதான் நஷ்டம் ஏற்படும். கோவாபரேடிவ் சங்கங்கள் இல்லாத இடங்களில் நேராக விவசாயியிடமிருந்து நெல்லை வாங்கவேண்டும். தரகர்கள் மூலம் கூடாது. விற்பனை சங்கங்கள் விஷயமாக, கவர்மெண்டு, பஞ்சாயத்தை அதற்கு உபயோகப்படுத்தும் என நம்புகிறோம்.

---

## நிலவரி சலுகைகள்.

கவர்மெண்டார் இந்த வருஷம் சுமார் 70 லக்ஷம் ரூபாய் வரி வஜா செய்ய தீர்மானித்திருப்பதைக் குறித்து சந்தோஷமடைகிறோம். கவர்மெண்டு அறிக்கை மற்றோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

---

# நிலவரி வஜா—சென்னை கவர்மெண்டின் உத்தரவு.

இந்த பசலிக்கும் நிலவரி வஜா செய்ய கவர்மெண்டு தீர்மானித்திருக்கிறது. கவர்மெண்டு அறிக்கை தெரிவிப்பதாவது—

விவசாய பொருள்களின் விலை மிகவும் குறைந்துவிட்டதால் 1342 பசலி முதல் (1932-33) கவர்மெண்டார் நிலதீர்வை விஷயமாய் வருஷா வருஷம் சலுகைகள் காண்பித்து வருகிறார்கள். இந்த இனத்தில் கவர்மெண்டார் வருமானம் 1937-38 முதல் ஒவ்வொரு வருஷமும் சுமார் 70 லக்ஷம் விட்டு விடப்பட்டது. இந்த யுத்த ஆரம்ப முதல் விவசாய பொருள்களின் விலை ஏற்றமாக இருந்து வருகிறது. இரண்டாம் போகப்பயிர் நெல் சராசரி விலை 1342 பசலியில் (1932-1933) இம்பீரியல் மணங்கு 1க்கு ரூ. 3.80 ஆக இருந்தது, 1941-42ல் ரூ. 5.53 ஆகவும், இப்போது 7:46 ஆகவும் ஏறியிருக்கிறது. நெல், இதர ஆகார பயிர்களின் விலை படிப்படியாக உயர்ந்துகொண்டே வருகிறது. இந்த பசலியில் கடலைக்காய், தேங்காய் இவைகளின் விலையும் அதிகரித்திருக்கிறது. அந்த அதிகரிப்பு நீடித்திருக்குமென்றே தோன்றுகிறது. சென்ற பசலியில் பருத்தியின் விலை ஏற்றமடைந்தது. பருத்தியின் கிராக்கி அதிகரிக்குமென்றே தோன்றுகிறது.

மொத்தத்தில் தற்சமயம் விவசாயிகளுக்கு அனுகூலமாக இருக்கும் விலைவாசிகள் நீடித்து இருக்கும் என்று சொல்லலாம். ஆகையால் நிலவரி சலுகைகளை கவர்மெண்டு வாபீஸ் செய்ய இடமிருக்கிறது. ஆனால் இந்த பசலியிலும் அந்த சலுகைகளைக்காட்ட கவர்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். விவசாயிகள் விலை ஏற்றத்தின் பூரணபலனை அடைய வேண்டுமென்பது அவர்கள் நோக்கம்.

# கவர்மெண்டு தொழில் இலாகா யாதாஸ்திலிருந்து சில குறிப்புகள்.

---

## குடிசை தொழில்கள்.

கிராம பக்கங்களின் கைத் தொழில்களை அபிவிருத்தி செய்யாமல், இந்தியா போன்ற ஒரு பெரிய விவசாய தேசத்திற்கு பொருளாதார அமைப்பு பூர்த்தியாக செய்யமுடியாது என்பது பொதுவாக ஒப்புக்கொண்ட விஷயம். ஏனெனில் எந்த தொழிலும் ரொம்பவும் பெரிதாக ஆரம்பித்து, எல்லா வேலையில்லாதவர்களையும் வேலைக்கு எடுத்துக் கொள்ளுவது என்றால் அதற்கு வெகு காலம் பிடிக்கும். ஆகையால் தொழில் அபிவிருத்திக்கு எந்த திட்டம் தயார் செய்த போதிலும், கிராமாந்தர தொழில்களை காப்பாற்றி விருத்திசெய்வது அவசியமாகிறது. நடந்த வருஷம் எல்லா விதமான குடிசைத் தொழில்கள் விருத்திக்காக மிக்க கவனம் செலுத்தப்பட்டது. இந்த வருஷம் அவரவர்கள் ஜில்லாக்களில் நடக்கும் குடிசைத் தொழில்களின் விருத்தியைப்பற்றி, செங்கல்பட்டு, ராமநாதபுரம், கோயம்பத்தூர், வெல்லூர், குண்டூர், மேற்கு கோதாவரி, அனந்தபூர், கடப்பை ஜில்லா கலெக்டர்கள் சமர்பித்த யாதாஸ்துகள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. செங்கல்பட்டில் பானைகள் செய்யும் தொழில் விஷயமாய் அபிவிருத்தி செய்ய இடமிருந்தது. வருஷ முடிவில், கிராமங்களில் ஷை தொழில் செய்பவர்களுக்கு, அவைகளுக்கு பளபளப்பு கொடுத்தல், திட்டமான சூடு கொடுத்து தயார் செய்தல், முதலியவைகளைப்பற்றி செய்து காண்பித்தது மன்றியில், அந்த ஊர்களின் மண்ணையும் இதர சாமான்களையும் எடுத்து சென்னை சித்திர கலாசாலைக்கு அனுப்பி, பரிக்ஷை செய்து பார்த்து, அதிலிருந்து கிராம ஜனங்கள் என்ன என்ன விதத்தில் அபிவிருத்தியடையும்படி செய்யலாம் என யோசனைகள் கூறவும், ஏற்பாடாகியிருக்கிறது. ராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் பன வெல்லத்தைப்பற்றியும் நாரைப்பற்றியும் குறித்திருக்கிறார். பன வெல்லம் விஷயமாக, மாகாணமுழுவதும் வெவ்வேறு இடங்களில் பன வெல்லம் மேன்மையானமுறையில் செய்யும் விதத்தை காண்பிக்க ஏற்பாடு செய்ய கவர்மெண்டுக்கு சாத்தியப்படாது என்றும், ஆனால் அந்த அந்த ஊர் ஜனங்கள் முன்வந்து சாமான்கள் சேகரித்து கொடுத்தும் கொஞ்சம் செலவை ஏற்றுக்கொண்டும் செய்தால் இலாகா உத்தியோகஸ்தர்கள் செய்துக் காண்பிக்க தயாராக இருப்பார்கள், என்று தெரிவித்தது. கயறு செய்வதைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டது. பெரிய பட்டணத்தில் மொத்தத்திற்கு ஒரு டெமான்ஸ்ட்ரேடர் நியமித்து, நாரை சுத்தம் செய்தல், கயறு பாய்கள் செய்தல், இவைகளைச் செய்து பார்க்க உத்தரவு செய்திருக்கிறார்கள். கோயம்பத்தூரில், கூடை போடுதல், பாய் போடுதல், தேனீவளர்த்தல், கயறு செய்தல், வெல்லம் காய்ச்சுவது, பட்டுநூல் செய்வது, கல்பொம்மைகள் செய்தல், இவைகளைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டது. அக்கரை எடுத்துக்கொண்டு தேனீ வளர்பதைப்பற்றி யாராவது வகுப்புகள் நடத்தினாலும், செய்து காண்பித்தாலும், தொழில் பள்ளிக்கூட விதிகளின்படி அந்த வகுப்புகளை அங்கீகரிக்கலாம் என கலெக்டருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், கயறு செய்பவர்கள் தற்சமயம் இருக்கும் கோவாபரேடிவ் கடன்

கொடுக்கும் சங்கங்களில் சேரலாம் என்றும், அதிலிருந்து தேவையான தகை பெற்று, தங்கள் சரக்கை பொள்ளாச்சி விற்பனை சங்கத்தின் மூலம், விற்க ஏற்பாடு செய்யலாம் என அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கொள்ளேகாலத்தில் கவர்மெண்டு காடுகளுக்கு சமீபம் வசிக்கும் பட்டுப் பூச்சி வளர்ப்பவர்களின் நன்மைக்காக, மல்பெரி காட்டு பிரதேசங்களை குமரிமுறை படி பயிர்செய்யும்படி காட்டிலாகாவுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வெல்லம் தயார் செய்வதைப்பற்றி, அந்த அந்த இடத்து ஜனங்கள் அதை தயார் செய்ய இலவசமாக சாரு, விறகு, கூலியாட்கள் கொடுத்தும், அடுப்புகள் கட்ட ஏற்படும் சிறிய செலவையும், ரயில் செலவையும், சாமான்கள் கொண்டுவரவேண்டிய செலவையும் ஏற்றுக் கொண்டால் மேன்மையான முறையில் வெல்லம் காய்ச்சுவதைப்பற்றி கவர்மெண்டார் செய்து காண்பிப்பார்கள். சில மட்டரகமான வெல்லம் காய்ச்ச தகுந்த விறகு கோயம்பத்தூர் வட சர்கிள் 'சாணர்' போலார்டு வொர்கிங் சர்கிள் கொடுத்து உதவுகிறது. அதேபோல் காடுகளுக்கு சமீபமுள்ள பிரதேசங்களில் தகுந்த விறகுகளுக்கு தேவை ஏற்பட்டால், அவை கொடுக்க ஏற்பாடு செய்யலாம்.

நெல்லூர் ஜில்லா குடிசைத் தொழில் விஷயமாக, தோல் பள்ளிக்கூடத்தில் கண்டு கூரிலிருந்து அனுப்பப்பட்டு பயிற்சி அடைந்து வரும் மதிகாமாணக்கன் பயிற்சிகாலம் முடிந்து திரும்பி வந்தபிறகு, உதய கிரியில் ஒரு கோவாபரேடிவ் சங்கம் ஸ்தாபித்து, அதில் அந்த மாணக்கனைக் கொண்டு உள்ளூர் தோல்வியாபாரத்தை விருத்தி செய்ய ஆலோசனை சொல்லும்படி கோவாபரேடிவ் சங்க ரிஜிஸ்த்ராரை கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். குண்டூர் ஜில்லா கலெக்டர் சமர்பித்த யாதாஸ்திலிருந்து, தித்திப்பு பனஞ்சாற்றிலிருந்து உயர்ந்த ரக வெல்லமும், நேராக சர்க்கரையும் தயார் செய்வதைப் பற்றி, தோல் ஆராய்ச்சி நிபுணர் ஆராய்ச்சி செய்து, இப்போது நைஜாம் பட்டணத்தில் அந்த பிரதேசத்திலிருக்கும் தொழில் செய்பவர்களின் அனுகூலத்திற்காக உயர்ந்த ரக வெல்லமும், சர்க்கரையும் செய்யும் ஒரு பண்ணை ஏற்படுத்த குண்டூர் ஜில்லா கலெக்டரின் யோசனையை அங்கீகரித்திருக்கிறார்கள். மேலும், அந்த தொழிலில் 12 மாணக்கர்களுக்கு பயிற்சியளிக்க வினவாச்ரமம் என்ற இடத்தில் ஒரு பண்ணை ஆரம்பிக்கவும் அங்கீகரித்திருக்கிறார்கள்.

மேற்கு கோதாவரி ஜில்லா விஷயமாக சென்னை தோல் பள்ளிக்கூடத்தில் தோல் சாமான்கள் தயார் செய்யும் வகுப்புக்கு, உபகாரச்சம்பளம் கொடுத்து மாணக்கர்களை பொறுக்கும் போது, சக்கிலி வகுப்பு பையன்களை கவனிக்கும்படி சொல்லப்பட்டது. டேப் தயார் செய்பவர்களுக்கு, அவர்கள் தற்சமயம் இருக்கும் கோவாபரேடிவ் கடன் சங்கங்களில் சேர்ந்து பண சகாயம் பெறலாம் என்று தெரிவிக்கும்படி கோவாபரேடிவ் சங்க ரிஜிஸ்த்ரார் கேட்டுக் கொள்ளப்பட்டார். கடப்பையில் பாய் செய்பவர்களுக்கு கோரப்புல் அதிகம் கொடுக்க, கோரப்புல் வளர்பதை விருத்திசெய்ய விவசாய உதவி டைரக்டர் உதவியுடன் ஜில்லா கலெக்டர் ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். தர்மாவரம் தாலூகாவிலிருக்கும் கம்பளி செய்பவர்களுக்கு நன்மை செய்ய, கோவாபரேடிவ் சங்கங்கள் ஏற்படுத்துவதைப்பற்றி கோவாபரேடிவ் சங்க ரிஜிஸ்தாருடன் கலந்து ஆலோசிக்குமாறு அனந்தப்பூர் கலெக்டர் கேட்டுக் கொள்ளப்பட்டார். பருத்தி துணி சாயம் போடும் விதத்தில் பயிற்சி பெற அந்த ஜில்லா பையன்கள் சிலரை, தொழில் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவும், அச்சடிக்கவும், கையால் செய்த காகிதம் தயாரிக்கவும் ஏற்பாடு செய்வதைப்பற்றி ஆலோசிக்கப்பட்டது. மேலும் தச்சுவேலை பள்ளிக்கூடங்கள், ஒன்றோ அதிகமோ, தொழில் பள்ளிக்கூடங்கள் விதிகளின்படி ஆரம்பிபபதைப்பற்றியும் பரிக்ஷித்துப் பார்க்கும்படி சொல்லப்பட்டது. கைவளையல்கள் செய்வது, பக்ஷிகளை வளர்பது, பாய் செய்வது, தோல் பதனிடுவது முதலியஇந்த ஜில்லா தொழில்களைப்பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. பிரத்யேக உத்தியோகஸ்தர் வளையல் தொழிலைப்பற்றி முதல் முதலாக கவனிக்கும் படிக்கு சொல்லப்படுவார். ஐக்ய மாகாணத்தில் வளையல் தொழில் செழிப்பாக நடக்கிறது. சேட்ட ஜில்லாக்களிலும் முன்பு ஒரு காலம் செழிப்பாக இருந்து வந்த வளையல் தொழிலை மறுபடியும் செழிப்பிக்கும்படி செய்ய இதுவே தக்க சமயம்.

சோளம் முதலிய தான்யங்களிலிருந்து தயார் செய்யப்பட்ட ஆகாரம் தயார் செய்யும் இயந்திரம் திருப்திகரமாக வேலை செய்கிறது. சுமாரான ரகமான ஆகாரங்கள் தயார் செய்ய ஏற்றதாக இருக்கிறது. ஆனால் இன்னும் கிடைக்கும் அனுபவத்திலிருந்து மேலும் சில மாறுதல்கள் செய்யவேண்டியிருக்கும்.

## கையால் செய்த காகிதம்.

இந்த வருஷம் கோடம்பாக்கம் ஹரிஜன தொழில் பள்ளிக் கூடம், காஞ்சீபுரம் ஹரிஜன தொழில் பள்ளிக்கூடம், குண்டூர் ஸ்ரீ கிருஷ்ணாச்ரமம், ராஜ மஹேந்திரபுரம் தேசீய தொழில் பள்ளிக்கூடம், சென்னை கோகுலம் குடிசைத் தொழில் பள்ளிக்கூடம், மலையாளம் ஜில்லா, கோபாலபுரம் கிராம தொழில் பள்ளிக்கூடம், இவைகளைச் சார்ந்த காகிதம் செய்யும் வகுப்புகள் நடந்து வந்தன. திருநெல்வேலி ஜில்லா மங்களகிரி கிராம ஊழிய ஸ்தாபனம் தொழில் பள்ளிக்கூடத்தில் நடக்கும் வகுப்புக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. காகிதம் செய்வதை ஒரு குடிசைத் தொழிலாக செய்யத்தூண்டுவதற்கு கவர்மெண்டார் இவ்வருஷம் கோடம்பாக்கம் ஹரிஜன தொழில் பள்ளிக்கூடத்தின் பழைய மாணாக்கர்கள் நான்கு பேர்களுக்கு தலா 30 ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுத்தார்கள். மேலும் அந்த தொழிலை ஆரம்பிக்க ஷை தொகையை பெத்தகடுபூர் பாரத்வாஜ ஆச்ரமத்திற்கு தென்னார்காடு ஸுமங்கலம் அசின் நகர் செடில்மெண்டில் நடத்தவும் பெல்லாரி ஜில்லா ஆதோனியிலும், அனந்தபூர் ஜில்லா கிருஷ்ணி பாடுவிலும், சித்தூர் ஜில்லா, வெங்கபல்லி ராஜாஜி கிராம முன்னேற்ற சங்கத்திற்கு கொடுத்து உதவினார்கள். தவிர, இந்த நான்கு ஜில்லாக்களில் சில கவர்மெண்டு ஆபீசுகளில், பழைய காகிதங்களை சேமித்து வைத்து, கையால் காகிதம் செய்யகற்றுக் கொள்ளும் மாணாக்கர்களுக்கு உபயோகிக்க கொடுக்கும்படி தெரிவித்திருக்கிறார்கள். கோடம்பாக்கம் ஹரிஜன தொழில் பள்ளிக்கூடத்தில், சிங் டாக்ஸ் முறைபடி தண்ணீரில் நனையாத காகிதம் மேல் அட்டைக்காக உபயோகப்படும்படி செய்யச் சொல்லி அதற்கு சகாயம் செய்வதைப் பற்றி இப்போது யோசனையில் இருக்கிறது. 22-3-1941 தேதி கவர்மெண்டு ஜி. ஓ. 574 படி கை காகிதம் தயார் செய்யவதைப்பற்றி ஒரு திட்டத்தை கவர்மெண்டு ஒப்புககொண்டது. அதன்படி அதை தயார் செய்து காண்பிக்க இரண்டு கோஷ்டி பிரசாரகர்களை நியமிக்கவும், அவர்களின் வேலையை மேற்பார்வை செய்து, கை காகிதம் செய்வதில் ஆராய்ச்சி செய்துபார்க்கவும் ஒரு தலைமை டெமான்ஸ்ட்ரேடரும் நியமிக்கப்படுவார்கள். ஒரு கோஷ்டி கடப்பை அல்லது அனந்தபூர் ஜில்லாவிலும், மற்றொன்று, சேலம், திருச்சி அல்லது மதுரை ஜில்லாவிலும் வேலை செய்யும். அவர்கள் ஏதாவது ஒரு பெரிய கிராமத்தில் சந்தையிடம் அல்லது வேறு மனித நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களில் வெகு காலம் வேலையை செய்து காண்பிப்பார்கள். பின்னிட்டு வேறு இடங்களுக்குச் சென்று, இதேபோல் காண்பிப்பார்கள். மேல் பார்வை செய்யும் டெமான்ஸ்ட்ரேடர் சென்னையில் தன் தலைமை ஆபீசை வைத்துக் கொண்டு, தோல் வர்த்தக பள்ளிக்கூடத்தில் வேலையை செய்து வருவார்.

அவர் காகிதம் செய்யத் தேவையாக இருக்கும் பலவித சாமான்களின் விலைவாசி, காகிதம் தயார் செய்யவாயக்கான கூழ் செய்வதற்கு ஏற்றதா, என்ன விதமான காகிதம் தயார் செய்ய அவை தகுந்தவை, இதை போன்ற விஷயங்களை பரிசைோதித்துச் சொல்லும்படி அவர் கேழ்கப்படுவார். தன் சுற்றுப்பிரயாணங்கள் போது, அவர் பிரசாரகர்களுக்கு தன் ஆராய்ச்சியின் பயனாக எந்த சாமான் மேன்மையானது என்று தெரிந்ததையும் அதை எப்படி உபயோகிக்கவேண்டும் என்பதைப்பற்றியும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுவார். செய்தும் காண்பிப்பார். தொழிலுக்கு மேன்மையான சாதனங்கள் கண்டு பிடிப்பதைப்பற்றியும் கவனம் செலுத்தப்படும்.

---

# நம் கனிச் செல்வம்.

நம் ஊர்களில் மாம்பழம், முதலிய பழங்கள் மலிவாக கிடைக்ும்போது, நாம் ஏன் குலு ஆரஞ்சு, ஜப்பான் ஆரஞ்சு, இவைகளைத் தேடிக்கொண்டு போக வேண்டும். நம் தேசத்து பழவகைகளிலிருந்து மேன்மையானதும், ஆரோக்யம் தரும்படியானதுமான சர்பத்துகள் நாம் தயார் செய்வதை விட்டு, வெளிநாடுகளி லிருந்து தயார் செய்யப்பட்ட பழ ரசபானங்களை நாம் ஏன் தருவிக்கவேண்டும்.

ஆதிகாலந்தொட்டு இந்தியாவில் பழ மரங்கள் அதிகம் பயிர் செய்யப்படுவ துண்டு. உலகமெங்கும் பரவி, மிகவும் போற்றப்பட்ட பழ வகைகள் அநேகம் முதலில் இந்தியாவில் உற்பத்தியாகி மற்ற தேசங்களுக்கு பரவி யிருக்கின்றன. பழ ஆகாரத்தின் அவசியத்தைப்பற்றி ஆகார சத்து ஆராய்ச்சி நிபுணர்கள் வற்புறுத்தி யிருக்கிறார்கள். பழங்களைப்போல் விடமின் எனப்படும் ஊக்குப்பொருள் நிறைந்த மற்ற ஆகாரம் மிகவும் குறைவு. நம்மை பீடிக்கும் பல நோய்கள், பல் வியாதி, கண், நரம்பு கோளாறு, எலும்பு வளர்ச்சி தடை படுவது, இன்னும் அநேக சில்லரை வியாதிகள், நம் ஆகாரத்தில் ஊக்குப்பொருள் இல்லாததால் உண்டாகிறது. இந்த குறையை சுலபமாகவும் அதிக செலவன்றியும், பழம், காய் கறிகள், பால் இவைகளை உண்டு, நிவர்த்தி செய்துக் கொள்ளலாம்.

தென்னிந்தியாவின் சீதோஷ்ண நிலமையும் நில வளமும் பலதரப் பட்டிருப் பதால், அங்கு எல்லாவிதமான பழவகைகளும் உற்பத்தியாகின்றன. பழவகை கள் பயிர் செய்வதில் மிகவும் முன்னேற்ற மடைந்திருக்கும் அமெரிக்கா முதலிய தேசங்களில், நீர் பாய்ச்சவும், பயிரை பனியிலிருந்து பாதுகாக்கவும் அதிக தொகை செலவு செய்யவேண்டியிருக்க, நம் தென்னிந்தியாவில் அவ்வித செலவு எதுவு மில்லாமல் பருவகாலத்து மழையின் உதவிகொண்டு நல்ல சில பழவகைகள் பயிர் செய்ய முடியும்.

நம் தேசத்தில் நமக்கு அநேக தடைகள் இருக்கின்றன.

பழ மரங்கள் பயிர் செய்ய உத்தேசிப்பவரை எடுத்துக்கொண்டால், முதன் முதலில் எந்த விதமான நிலம் வேண்டும், என்னவகை செடி பயிர் செய்ய ஏற்றது, செடி நட்டது முதல் கடைசி வரையில் எந்த விதமாக செடிகளை வளர்க்க வேண்டும், என்ற இவைபோன்ற விவரங்கள் கிடைப்பதில்லை. அநேகமாக அவன் பண்ணையிலிருந்து கொண்டுவந்த செடியானது மட்டமானதாகவும், அதிக பலன் கொடுக்காததுமாக இருக்கிறது. அப்படி அதிகப்படி பலன் கொடுத்தாலும், அநேக வருஷங்களில் பயிரான பழங்களுக்கெல்லாம் கிராக்கி கிடைப்பதில்லை. அநேக வருஷங்களில் பயிர் சாவியாகி விடுகிறது. அதை தடுக்க வழிதெரிவதில்லை. அவன் அந்த ஊரில் இல்லாமலும், பயிர் விஷயத்தில் அதிக ஊக்கம் காட்டாவிட் டாலும், அவன் வேலைக்காரர்கள் அதை பாழாக்கி விடுகிறார்கள்.

இத்தனை தடைகளிலிருந்தும், அநேக பழ பண்ணைகள் லாபத்தைக் கொடுக் கின்றன. அவைகள் பக்கத்தில் லாபம் கொடுக்காத பண்ணைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

பழ மரங்கள் வளர்ப்பதை அதே தொழிலாக, அதில் நல்ல தேர்ச்சியடைந் தவர்கள் கவனித்து, பழதினுசுகளில் தீவிர ஆராய்ச்சி செய்து, சரியான முறைகளை சகல ஜனங்களும் அனுசரிக்க சாத்தியமாகும்படி செய்தால்தான் அந்த தொழிலில் பிரயோஜனம் ஏற்படும். இந்த விஷயமாய் நம் மாகாணத்தில் ஒரு முயற்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பழவகைகள் உற்பத்தி செய்வதைப் பற்றி பொதுவாக விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களும், முக்கியமாக புதிதாக ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் பழ இலாகா உத்தியோகஸ்தர்களும் எல்லாருக்கும் சகல ஆலோசனை களும் சொல்லதயாராக இருக்கிறார்கள். பழச் செடிகள் பயிர் செய்பவர்கள் அவர்களுடைய யோசனைகளைக்கேட்டு, தற்போதபோல் தாறுமாறான முறைகளை யனுசரிக்காமல், சாஸ்திரீயமான முறைகளை கையாண்டு பழவகைகள் உற்பத் தியை இந்த மாகாணத்தில் நல்ல ஆதாரமுள்ள அஸ்திவாரத்தின் பேரில் விருத்தி செய்யவேண்டுமென சொல்லுகிறோம்.

# வர்த்தமானங்களும் குறிப்புகளும்.

**கால் நடைகள் அபிவிருத்தி, சென்னை கவர்மெண்டு மானியம்—**

இந்தியா கவர்மெண்டின் திரவிய சகாயத்துடன் துவக்கப்பட்ட கால் நடைகள் அபிவிருத்திவேலை மேலும் விடாமல் நடை பெறுவது மிகவும் விரும்பத்தக்கதாகையால், சென்னை கவர்மெண்டார் கால் நடை அபிவிருத்தி நிதிக்கு அந்த வேலைமேலும் நடத்திவரும் பொருட்டு, இரண்டு வருஷங்கால வருஷம் 23,000 ரூபாயாக, தொகை அனுமதித்திருக்கிறார்கள். அதில் 20,000 ரூபாய் நல்ல காளை எருது வாங்கி, தகுந்த விவசாயிகளுக்கு அங்கங்கே கொடுத்து உதவவும், பாக்கி தொகை முக்கியமான இடங்களில் ஒரு கால் நடை காக்ஷி ஒரு நாள் ஏற்பாடு செய்து, அப்போது பரிசகள் கொடுக்கவும் உபயோகப்படுத்தப் படும். இந்த தொகையிலிருந்து வாங்கின எருதுகளை கால் நடை இலாகா டைரக்டர் 31-3-1943க்குள் விநியோகிப்பார்.

• • •

**படித்த வேலையில்லாதவர்களுக்கு விவசாய பண்ணை—**

மைசூர் கவர்மெண்டார் படித்த வேலையில்லாதவர்களைக் கொண்ட ஒரு விவசாய பண்ணையை ஸ்தாபிக்க திட்டம் போட்டிருக்கிறார்கள். அதன் படி சில நிபந்தனைகள் பேரில், 20 பேர்கள் பொறுக்கப்பட்டு தலா 1,000 ரூபாயும் கொஞ்சம் நிலமும் தேவையான ஆயுதங்களும் சாகுபடி செய்யும்படி கொடுக்கப் படுவார்கள்.

• • •

**பெங்களூரில் கைவேலை பள்ளிக்கூடம்.—**

மைசூர் மாஜி திவான் சர். எம். விச்வேச்வரய்யாவின் திட்டத்தின் படி ஒரு கைவேலை பள்ளிக்கூடத்தை பெங்களூரில் ஆரம்பிக்க மைசூர் கவர்மெண்டார் அனுமதித்திருக்கிறார்கள். அவர் தனக்கு மைசூர் பத்ராவதி இரும்பு சாலை தலைவர் என்று தனக்கு அதிலிருந்து கிடைக்கும் ஊதியம் பூராவையும் அ. து. 1,30,000 ரூபாயை ஷை பள்ளிக்குக்கொடுத்துவிட முன் வந்திருக்கிறார். வேலை ஆரம்பிக்க மூலதனம் 5 லக்ஷம் தேவை. நடத்தும் செலவு முதலில் 75,000 ம், பின்னிட்டு சீக்கிரத்தில் வருஷத்தில் 1 லக்ஷம் ஆகும். முதலில், மெகானிகல், எலக்டிரிகல், ரேடியோ, மோடார் வேலை அவை யுள்பட 12 வகை பாடங்கள் சொல்லிக்கொடுக்கப்படும். ஒவ்வொரு வகுப்புக்கும் சமஸ்தானத்தின் எல்லா பாகங்களிலிருந்தும் 30 பையன்கள் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். இந்த முயற்சி இளைஞர்களுக்கு நன்மையேதரும்.

• • •

**கடலைக்காய் உற்பத்தியாளர்களுக்கு கவர்மெண்டு கடங்கு.—**

கடலைக்காயை கொஞ்சமாக பயிர்செய்து, அதை சேர்த்து வைக்க தங்கள் வீடுகளில் இடவசதி யில்லாமலும், வாடகை கொடுத்து கடங்கு வைத்துக் கொள்ள முடியாமலும் இருக்கும் ஜனங்களின் நன்மையை உத்தேசித்து, கவர்மெண்டார், விழிப்புரம், விருத்தாசலம், திண்டிவனம், கூடலூர், திருக்கோயிலூர், உளுந்தூர்

பேட்டை, தாட்பத்ரி, பலமனேரி, நந்தியால், கர்நூல், ஆதோனி, பெஜவாடா, நந்திகாமா, ஆரணி, அரியலூர் முதலிய இடங்களில் கடங்குகள் கட்ட தீர்மானித்திருக்கிறார்கள். 13 கட்ட தலா 31,000 ரூபாயும், பாக்கிதலா 24,000 ரூபாயும் செலவு பிடிக்கும். கோவாபரேடிவ் சங்கங்கள் இருக்கும் இடங்களில் இந்த கடங்குகள் அவைகளால் நடத்தப் படும். மற்ற இடங்களில் விவசாய இலாகா நடத்தும்.

* * *

பஞ்சாயத்து குறிப்புகள்.

கவர்மெண்டு சுல்தான் பேட்டை (நெல்லூர்), குருகோடே (பெல்லாரி) பஞ்சாயத்துகளை 6 மாதத்திற்கு கலைத்து விட்டது.

* * * *

டையர்கள் கட்டுப்பாடு உத்தரவுபடி எல்லா ஸ்தல ஸ்தாபனங்களையும் தங்கள் மோடார் வண்டிகளை கரிபோட்டு ஓட்டும் வண்டி களாக மாற்றவேண்டாம் என்று யோசனை கூறியிருக்கிறது. ஏனெனில், அப்படி மாற்றுவதில் பெட்ரோல் மிச்சப்படுமே தவிர டையர் மிச்சப்படாது. மேலும், அனுவசியமான மோடார் வண்டிகளை நிறுத்திவிடும்படிக்கும், பெட்ரோல் வண்டியானாலும் சரி, கரிவண்டியானாலும் சரி, அவைகளுக்கு பதில் மாட்டுவண்டிகளையே உபயோகிக்கும்படிக்கும், அப்படி சௌகர்யப்படாத பக்ஷத்தில், அவைகளை அதியாவசிய மானவை, அவசியமில்லாதவை என இரண்டு வகுப்புகளாக பிரிக்கும்படி சொல்லியிருக்கிறார்கள்.

# நிர்வாக போர்டு அங்கத்தினர்கள்.

---

**விசாகப்பட்டணம் :—** (1) பி. பட்னேக், சாலூர், சாலூர் தாலூகா; (2) பட். விச்வநாதம், குஜராதி பேட்டை, ஸ்ரீபுரபள்ளி தாலூகா; (3) ஐ. சத்தியநாராயண பந்துலு, தனுகுபூடி, சோடவரம் தாலூகா.

**கி. கோதாவரி :—** (1) என். வெங்கடரத்தினம், அனந்தவரம், அமலாபுரம் தாலூகா; (2) தசரி அம்மண்ணு, சிந்தலூரு, ராமசந்திரபுரம் தாலூகா; (3) வ. ரங்கராவ்காரு, நாயகம்பள்ளி, பெத்தாபுரம் தாலூகா.

**மே. கோதாவரி :—** (1) கே. கங்கராஜுகாரு, கேசவரம், தாதபள்ளிக்கூடம் தாலூகா; (2) கே. சூர்யநாராயணு, அகரு, நரசபூர் தாலூகா; (3) கே. கிருஷ்ணமூர்த்தி, சேரிபாலெம், காசபுரம் தாலூகா.

**கிருஷ்ணு :—** (1) சி. எச். மதுசூதனராவ், கோலவெண்ணு. (2) எம். வெங்கடதாசுகாரு, தமிராசா. (3) வி. பூர்ண சந்திரய்யகாரு, கலவபமுலா.

**நெல்லூர் :—** (1) கே. சுந்தரராமி ரெட்டி, முத்துகூறு; (2) பி. ராதா கிருஷ்ண ரெட்டி, கொவ்லூர், நெல்லூர்; (3) ஒய். லக்ஷ்மிநாராயண ரெட்டி, கூடூர்.

**குண்டூர் :—** (1) வ. நாராயண ராவ், அம்மனபிரோலு; (2) ஜி. சுப்பையா, கனுபார்த்தி; (3) கே.வி. கிருஷ்ணய்ய, காவாடி.

**கடப்பை :—** (1) பி. டி. வீரா ரெட்டி, சென்னூர்; (2) எஸ். நாகி ரெட்டி, வேம்பள்ளி; (3) ஜி. எர்ர ஓபுலரெட்டி, பாதகடப்பை.

**கர்னூல் :—** (1) ஒய். நாராயணரெட்டி; (2) பி. ராமிரெட்டி, புரகல கிராமம்; (3) பி. பி. திருமல நாயுடு பூபள்ளி.

**பெல்லாரி :—** (1) ஒய். காடிலிங்கண்ண கௌட், குடிகல்; (2) பி. எஸ். ஓபலநாயக், கோரிகி; (3) ஜே. சன்தன கௌட், நந்தவரம்.

**அனந்தப்பூர் :—** (1) ஆர். சித்தண்ண கௌட், மடகசிரா; (2) லிங்கரெட்டி, ஜி. மலயவந்தம், தர்மாவரம்; (3) எல். வெங்கட நாராயணப்பா, லேபாக்ஷி.

**சித்தூர் :—** (1) என். சி. ராமிரெட்டி, கள்ளிக்கேரி; (2) சே. என். நரசராஜு; (3) கேசவலு ரெட்டி.

செங்கல்பட்டு:— (1) கே. பி. குமாரசாமி பிள்ளை, கணியம்பாக்கம், பொன்னேரி தாலூகா; (2) சி. டி. கோபாலசாமி முதலியார், அமிஞ்சிகரை; (3) டி. திருவேங்கடச்சாரி, பாக்கம், தின்னனூர்.

வட ஆர்காடு:— (1) கே. எம். சிங்காரவேலு முதலியார், கலவை; (2) டி. கிருஷ்ணமூர்த்தி, 16-பெத்திபூர்: (3) எம். பெரியண்ண கௌண்டன், வெள்ளக்குல்லாய்.

தென்னார்காடு:— (1) வி. குப்புசாமி ரெட்டி, தாதாபுரம்; (2) சுப்பராமன், ரெட்டாளை. (3) எம். ராமகிருஷ்ண ரெட்டி, அத்திபாக்கம்.

மதுரை:— (1) ரங்கசாமி நாயுடு, புதூர்; (2) கே. சிவலிங்கம் பிள்ளை, தோட்டமுத்து; (3) பொன்னுசாமி தேவர், சின்னமானூர்.

கோயம்பத்தூர்:— (1) எம். சியாணுதிகம், மேட்டுபாளையம்; (2) வி. எல்லம நாயுடு, பளுவப்பட்டு; (3) கே. எம். மதுடபதி, கொடுமுடி.

ராமநாதபுரம்:— (1) ஆர். கிருஷ்ணசாமி நாயுடு, ராமசந்திரபுரம்; (2) ஜி. அழகிரிசாமி நாயுடு, மஹாராஜபுரம்; (3) பி. ராமசாமி நாயுடு, பந்தல்குடி.

திருநெல்வேலி:— (1) ஆசிர். கோவில் பிள்ளை, நாஜரெத்; (2) கந்தசாமி, கோவில்பட்டி; (3) சின்னமுத்து, சாத்தான்குளம்.

நீலகிரி:— (1) டி. மங்க கௌடர், சோலூர்; (2) ஐ. கே. நஞ்ச கௌடர், எமெஹட்டி; (3) ஜே. எம். கோரு கௌடர், ஜகதலா.

மலையாளம்:— (1) எம். பக்தவத்ஸலம், வைத்தியத்திரி; (2) கே. அட்டகாயதங்கான்; (3) கோபாலகிருஷ்ண நாயர்.

திருச்சி:— (1) வி. ராமரத்தினம், கொய்யாமணி; (2) ஆர். கணபதி ரெட்டியார, நாராயணமங்கலம்; (3) சி. குப்புமுத்துப் பிள்ளை.

சேலம்:— (1) ராஜாசுப்ரமண்ய செட்டியார், கோசம்பட்டி; (2) ஆர். மாரப்ப கௌண்டர், புதுப்பட்டி; (3) எம். நடராஜம் பிள்ளை, மேட்டுப்பட்டி.

தென் கன்னடம்:— (1) எம். நாராயண ராவ்; (2) எஸ். ராதாகிருஷ்ணய்யர்; (3) ஸ்ரீமதி காவேரி அம்மாள்.

தஞ்சாவூர்:— (1) முத்துகுமாரசாமி முதலியார், மூவலூர்; (2) எம். டி. தியாகராஜ பிள்ளை, கொரடாச்சேரி; (3) கே. கோபாலகிருஷ்ண அய்யர், மூலங்குடி.

# மதருஸ் ப்ரோவின்ஷியல் கோஆபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

---

தலைமை ஆபீஸ்.

சைனு பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு:

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

பிரசிடெண்டு:

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி.

ஸெக்ரடேரி:

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதருஸ் கார்பரேஷனுக்கும், மதருஸ் யூனிவர்ஸிடி, அண்ணமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும்:

செக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

---

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர் வி. வெய்யன்னு, பி.ஏ., பி.எல்., 187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதருஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும் சென்ட்ரல் கோஆபரேடிவ் அச்சுக்கூடத்தில் மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது

# ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதராஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடென்ட்.)

---

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகாப்பளிப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பாலிஸி தொகை | — | **1,30,00,000.** |
| க்ஷேமநிதி | — | **10,00,000.** |

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

**வி. வெங்கடாசலம்**, எம். ஏ., பி. எல்.,

காரியதரிசி.